திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் உருவத் தபால் தலையை வெளியிட மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது வெளியிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒப்புக்கொண்டார்கள் என்று நான் சொல்லவில்லை; கடிதம் எழுதியிருக்கிறோம். பல தடவை அவர்களுக்கு நினைவூட்டி கடிதம் எழுதியிருக்கிறோம். 1–6–81 தேதி பாரதிதாசன் அவர்களின் அஞ்சல் தலையை வெளியிட வேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்குப் பிறகு 10–7–81, 18–8–81, 30–9–81, 11-11-81, 15–12–81, 9–2–82 ஆகிய நாட்களில் மீண்டும் நினைவுக் கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராஜ சுவாமிகள் தபால் தலையை மத்திய அரசு வெளியிட விரும்பியபோது, இப்படி தபால் தலையை வெளியிடும்போது, அதிலே சீல் குத்தும்போது, அந்த முகத்தை பாதிப்பதாக உள்ளது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனவே, பாரதிதாசன் தலையை வெளியிடும்போது, முகத்தை பாதிக்காத அளவு ஒதுக்குப்புறமாக சீல் குத்துவதற்கு ஏற்பாடு. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியிட்ட பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம். இன்னும் வெளியிடவே இல்லை.

அரசு அலுவலகங்களுக்கு வாராந்திர விடுமுறை நாட்கள்.

* வினா எண் 518—திரு. ப. அங்குசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்கட்கு வாரம் இரண்டு நாட்கள் விடுமுறை விடும் திட்டம் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து நாட்கள் வேலை என்ற செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருந்து வந்தது.

(ஆ) மத்திய அரசு அலுவலகங்களில் இதே மாதிரியான செயற்குறிப்பினைக் கைவிட்டு விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே மாநில அரசும் இச்செயற்குறிப்பினை கைவிட்டு விட்டது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசு அலுவலக நாட்கள் 5 நாட்களாகக் குறைக்கப்படுகின்றபோது, வேலை நேரம் கூட்டப்படுமா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1982 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம் நாட்டிலே உள்ள மக்களின் பல்வேறு யோசனைகள், சிந்தனைகள் ஆகியவற்றை ஆராய்ந்ததற்குப் பிறகு, அது கைவிடப்பட்டது. அப்படி 6 நாட்களை 5 நாட்களாகக் குறைக்கின்றபோது, வேலை நேரத்தைக் கூட்டுகின்ற சூழ்நிலை ஏற்படும். அப்படி கூட்டப்படுகின்றபோது, இதைப்பற்றி கருத்து பொது மக்களிடமிருந்தும், அரசுத் துறையிலிருந்தும் கேட்டறிந்தபோது, மத்திய அரசு இவைகளை ஆராய்ந்து பார்த்து, இந்த நிலை சரிப்பட்டு வராது என்று கைவிட்டது. அதை ஆராய்ந்து மாநில அரசும் அந்த நிலையை கைவிட்டிருக்கிறது.

அரசு நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலை.

* வினா எண் 441—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெல் கொள் முதல் விலை அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் நெல் கொள்முதல் விலைகளை விடக் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(இ) ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 150 வேண்டும் என்ற கோரிக்கை குறித்து அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நடப்பு பயிராண்டில் கேரள மாநிலத்திலும் தமிழ் நாட்டிலும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளிலேயே கொள்முதல் செய்யப் படுகிறது. கர்நாடகா மாநிலத்தில் மட்டும் மத்திய அரசு நிர்ணயித்துள்ள நெல்லின் கொள்முதல் விலைகளை விட குவிண்டாலுக்கு ரூ. 10, விவசாயிகளிடமிருந்து வாங்கப்படும் நெல்லுக்கு போனசாக தரப்படுவதாகத் தெரிகிறது.

(ஆ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குமேல் கொடுத்து வாங்கினால் கொள்முதலுக்காக சலுகை வட்டியில் ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் கிடைக்காது.

(இ) நெல்லின் உற்பத்திச் செலவின் அடிப்படையில் கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசை இவ்வரசு வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து வற்புறுத்தப் படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் கர்நாடக அரசு 10 ரூபாய் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல மேற்கு வங்கத்திலே குவிண்டாலுக்கு 125 ரூபாய் கொடுக்கப்படுகிறது. உற்பத்திச் செலவை கணக்கில் எடுத்துக்கொண்டு கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். உற்பத்திச் செலவு இந்த ரூ. 115-க்குள் தான் இருக்கிறதா? சில இடங்களிலே அதிகமாக இருப்பதால் மிகக்